# இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி) சென்னை - 600004.

## உயர் தமிழாய்வு மையம்

## கலைஞர் நூற்றாண்டு நினைவுப் பன்னாட்டுக் கருத்தரங்கம்

## பங்கேற்புச் சான்றிதழ்

முனைவர்/திரு/செல்வி/திருமதி ........தே. தேன்மொழி........

.................................... 18.03.2025 அன்று நடைபெற்ற பன்முக நோக்கில் முத்தமிழறிஞர் கலைஞர் படைப்புலகம் என்ற பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கில் ஆய்வாளராக/பங்கேற்பாளராகக் கலந்து கொண்டு ........சிறுகதைகளில் கலைஞரின் ஆளுமை........ என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கிச் சிறப்பித்தார் என்று சான்றளிக்கப்படுகிறது.

வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| ஒருங்கிணைப்பாளர்கள் | தமிழ்த்துறைத் தலைவர் | முதல்வர் |
| உயர்தமிழாய்வு மையம் | உயர்தமிழாய்வு மையம் | இராணி மேரி கல்லூரி |

பன்முக நோக்கில் முத்தமிழறிஞர்

# கலைஞரின்
## படைப்புகள்

தொகுதி 1



தொகுப்பாசிரியர்கள்:
முனைவர் இர.சிவசக்தி
முனைவர் கே.இரா.கமலாமுருகன்

சீதை பதிப்பகம்

பன்முக நோக்கில் முத்தமிழறிஞர்

# கலைஞரின்

படைப்புகள்

தொகுதி
1

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டை

முன்னிட்டு நடந்த கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு.

**இராணி மேரி கல்லூரி (தன்னாட்சி),**

**சென்னை - 600004.**

தொகுப்பாசிரியர்கள்

**முனைவர் இர.சிவசக்தி**

இணைப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்

**முனைவர் கே.இரா.கமலாமுருகன்**

இணைப் பேராசிரியர்

**சீதை பதிப்பகம்**

**சென்னை - 600 005.**

☎ 9790706548 / 9790706549 / 9943428994

தலைப்பு :

பன்முக நோக்கில் முத்தமிழறிஞர்
கலைஞரின் படைப்புகள்

PANMUGA NOKKIL MUTHAMIZHARIGNAR
KALAIGNARIN PADAIPUKAL

தொகுப்பாசிரியர்கள் :

முனைவர் இர.சிவசக்தி
முனைவர் கே.இரா.கமலாமுருகன்

DR.R.SIVASAKTHI
DR.K.R.KAMALA MURUGAN

பொருள் :

கட்டுரை
NON-FICTION

பதிப்பாசிரியர் :

எஸ்.கௌமாரீஸ்வரி எம்.ஏ.,எம்.எல்.ஐ.எஸ்.,
S.Gowmareeswari M.A.,M.L.I.S.,

உரிமை :

பதிப்பகத்திற்கே
copyrights@publications

வெளியீடு :

**சீதை பதிப்பகம்**
6A/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

அச்சிட்டோர் :

R.I.S.PRINTERS, CHENNAI.

பதிப்பு :

முதற் பதிப்பு - 2024/11

பக்கம் : 368

ஒளி அச்சு : ஜெய் ஜீனா

ISBN : 978-93-48472-02-1

விலை : ரூ.1300
(3 தொகுதிகள்)

Code : 2628

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா ஏஜென்ஸீஸ்**
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.
9790706548 / 9790706549.
gowra09@gmail.com

**கௌரா புத்தக மையம்**
9, செயிண்ட் ஜான் சர்ச் காம்ப்ளக்ஸ்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 620001.
9952034876 / 9943428994.
gowraputhagamaiyam@gmail.com

www.gowrabookfair.com

15. முத்தமிழ் அறிஞரின் படைப்புலகம் .................................................... 92
புட்பா கிறிட்டி,

16. செம்மொழி வரலாற்றில் கலைஞரின் பங்களிப்பு .................................................... 96
செ.பிரபாகர்,

17. தலைவர் கலைஞர் படைப்பாற்றல்! .................................................... 103
நல்லாசிரியர் முனைவர் தி.க.நாகராஜன் M.A., B.Ed., M.Phil., Phd.,

18. கவிதை மழையில் சமூகநீதி .................................................... 111
முனைவர் குமரிச்செழியன்,

19. கலைஞரின் திரைப்பட வசனங்களில் பகுத்தறிவுச் சிந்தனைகள் ... 118
முனைவர் ப.தேவராஜ்

20. கலைஞரின் சிறுகதைகளைப் பற்றிய எண்ணச் சிதறல்கள் .......... 127
முனைவர் இ. மதியழகி

21. கலைஞரும் கணினித்தமிழும் .................................................... 131
முனைவர். பூ. சேகர்

22. பகுத்தறிவின் வழி சாதிய நெகிழ்வை உருவாக்கும்கலைஞரின்
"ஒரே இரத்தம்" புனைவாக்கம் .................................................... 139
முனைவர். சு. செல்வகுமாரன்

23. தேசியத் தலைவர் – கலைஞர்... .................................................... 151
முனைவர் அ. இராசேந்திரன்

24.மானுடம் பூத்தது .................................................... 161
முனைவர் க. கிருத்திகா

25. கலைஞரின் சிறுகதைகளில் திராவிடக் கருத்தியல் .................... 165
முனைவர் த. மோகன்தாஸ்,

26. முத்தமிழறிஞர் கலைஞரின் கவிதை மழையில்
பல்துறை ஆளுமைத் திறன்கள் .................................................... 174
முனைவர் மு. கோவிந்தராசன்,

27. கலைஞரின் பார்வையில் பெண் .................................................... 178
தமிழ் செம்மல் முனைவர் பா.வேலம்மாள்,

28. கலைஞரின் குறளோவியத்தில் சிந்தனை துளிகள் .................... [illegible]
ர.யோகவள்ளி,

29. சிறுகதைகளில் கலைஞரின் ஆளுமை .................................................... [illegible]
முனைவர் தே. தேன்மொழி

30. கலைஞர் மு. கருணாநிதியின் பன்முகப் புலமை .................... [illegible]
ஜெ.பி. இரவி,

31. கலைஞரின் திரை இசைப் பாடல்களில் போர்குணம் .................... [illegible]
முனைவர் எ. பாவலன்



# 29.சிறுகதைகளில் கலைஞரின் ஆளுமை


முனைவர் தே. தேன்மொழி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் பல்கலைக்கழகம்
செல் : 8610928727
thenmozhi.sl@velsuniv.ac.in


**முன்னுரை**

ஒற்றை விதைக்குள் ஓராயிரம் விருட்சங்கள் ஒளிந்திருக்கும் பேரதிசயம் கலைஞர் கருணாநிதி. தமிழ் வாழ்வின் அத்தனைப் பரிமாணங்களையும் தம் படைப்புக்குள் கொண்டுவந்து கொட்டிவிடும் வித்தை கற்றவர். உரைநடையில் எதை எழுதினாலும் அதைக் காப்பியமாக்கி விடும் கலை அறிந்தவர். மேடையில் எதை முழங்கினாலும் அதைக் கவிதையாய் கட்டமைக்கிற நுட்பம் கலைஞரது எழுதுகோலுக்கு உரியது.

தமிழ்ச் சமூகத்தின் கரடுமுரடான பாதைகளையெல்லாம் கலைத்துப் போட்டுவிட்டுத் தன் ஆற்றல் வாய்ந்த எழுத்தாளுமை யால் கலைவண்ணம் மிக்க கலையாக மாற்றுபவர்.

பழைய மரபுகளை அகழ்ந்தெடுத்து அவற்றை ஆராய்ந்தெடுத்துப் புதிய உலகுக்கு ஏற்ற வகையில் அவற்றை வடிவமைத்துத் தரும் ஒப்பற்ற எழுத்துச்சிற்பி.

அரசியல்தான் தான் விரும்பித் தேர்ந்தெடுத்து பணிபுரியும் துறை என்று கலைஞர் அடிக்கடி சொன்னாலும், "அரசியல்/ ஆட்சி அழுத்தங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளவே கலை இலக்கியச் செயல்பாடுகளில் ஈடுபடுகிறேன்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இலக்கியத்தின் பல்வேறு பரிணாமங்களிலும் அவருடைய ஆர்வமான செயல்பாடு இருந்திருக்கிறது. தன்னை முதன்மையாகப் பத்திரிகையாளர் என்று அவர் பெருமையாக அடையாளப்படுத்திக் கொண்டாலும், இதழியல் மட்டுமின்றி சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், திரைப்படம், தன்வரலாறு, பேச்சு என்று கிளைவிரித்து தமிழ் பரப்பியிருக்கிறார்.

கலைஞரின் தமிழ்ப் பணிகளில் அதிகம் பேசப்படாதவையாக அவரது சிறுகதைகள் அமைந்திருக்கின்றன. சினிமா, நாடகம், பேச்சு

என்று தன்னுடைய மற்ற ஆற்றல்களை எல்லாம் எப்படி நாவ ஏற்றுக்கொண்ட கொள்கை அரசியலுக்கு பயன்படத்தக்க வகையில் மாற்றிக் கொண்டாரோ, சிறுகதைகளையும் அப்படியேதான் உபயோகித்திருக்கிறார். திராவிட இயக்கத்தின் கருத்துக் கூறுகளை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பாகதான் அவர் சிறுகதைகளையும் பார்த்திருக்கிறார்.

## சிறுகதை இலக்கணம்

சிறுகதைக்கான கலைஞரின் இலக்கணம் மிகவும் எளிமையானது "ஒரு காட்சி அல்லது நிகழ்வைப் பற்றி, மற்றவர்களுக்கு எடுத்து விளக்கிச் சொல்லும்போது, அவரவர் நிலைக்கேற்பவும், அறிவு வளர்ச்சிக்கேற்பவும், விளக்குபவருக்கும், விளக்கத்தைக் கேட்பவருக்குமிடையே ஒரு பாலமாகப் பாவிக்கப்படுவதுதான் சிறுகதை".

'எழுத்தாளர் ஏகலைவன்' என்கிற சிறுகதையில், "சிறுகதை என்றால் வெறும் பொழுது போக்குக்காகப் படிப்பதற்காகவா எழுதப்படுவது? அதில் ஏதாவது ஒரு கருத்து, சமுதாயத்துக்குத் தேவையானதாக அமைக்கப்பட வேண்டாமா?" என்று தான் ஏன் சிறுகதை எழுதுகிறார் என்பதை கதையின் போக்கிலேயே சொல்லியிருப்பார்.

## கலைஞரும் சிறுகதைகளும்

இன்றைய நவீன இலக்கியவாதிகளில் கலைஞரை அதிகம் வாசித்த மிக சிலரில் பிரபஞ்சனும் ஒருவர். "ஒரு கருத்து, சிந்தனை அல்லது அனுபவத்தை சமூகம் சார்ந்து வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பாகவே கலைஞர் தன்னுடைய சிறுகதைகளை பயன்படுத்தி இருக்கிறார். கருத்து இல்லாத, சமூக உணர்வு சற்றுமில்லாத ஒரே ஒரு கலைஞரின் சிறுகதையைக் கூட நான் வாசித்ததில்லை' என்று சொல்லியிருக்கிறார் பிரபஞ்சன்.

## கலைஞரின் சிறுகதைகள்

கலைஞரின் 21வது வயதில் 'கிழவன் கனவு' என்கிற சிறுகதைத் தொகுப்பை 1945இல் வெளியிட்டிருக்கிறார். அடுத்து எட்டு ஆண்டுகள் கழித்து 1953இல் 'நாடும் நாகமும்', 1956இல் 'தாய்மை' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கிறார். பின்னர் 'கண்ணடக்கம்', 'அரும்பு', 'வாழமுடியாதவர்கள்', 'சங்கிலிச்சாமி', 'தப்பிவிட்டார்கள்' உள்ளிட்டத் தலைப்புகளில் பதினைந்துக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. 1971இல் பெரும் தொகுப்பாக முக்கியமான கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு 'கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள்'



என்று வெளியிடப்பட்டது. 1940இல் தொடங்கி 1970களின் இறுதி வரையில் கலைஞர் ஆர்வத்தோடு கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் சிறுகதைகள் எழுதுவதில் ஈடுபாடு காட்டியிருக்கிறார். அதன் பிறகு நாவல், ஆய்வுநூல்கள் என்று அவரது ஆர்வம் திசைமாறிய நிலையில் மிகவும் அரிதாகவே சிறுகதை எழுதியிருக்கிறார். இயக்கம் சார்ந்த இதழ்களிலேயே கலைஞரின் சிறுகதைகள் பெரும்பான்மையாக இடம்பெற்றிருக்கின்றன. அவை தவிர்த்துக் கொஞ்சம் அரிதாகவே வெகுஜன இதழ்களில் எழுதியிருக்கிறார்.

கலைஞரின் முதல் சிறுகதை என்ற பெருமைக்குரியது கிழவன் கனவு. கலைஞரின் குட்டிக்கதைகள் 34, கலைஞர் சொன்ன கதைகள் 40 ஆகியனவற்றோடு சேர்த்து கலைஞர் எழுதியுள்ள சிறுகதைகளின் எண்ணிக்கை 160 ஆகும். 1940- களில் கலைஞர் எழுதி வெளியிட்ட அவரது முதல் நூல் என்ற பெருமை பெற்ற இந்நூல், கலைஞரது இளமைக்காலத்து எழுச்சித்துடிப்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இக்கதை இளைஞன் ஒருவனின் உள்ள எழுச்சி உடைப்பெடுத்து ஓடுவதையும், அவனது பெற்றோரைத் தாக்கிய ஆரியம் அவனிடம் அணுக அஞ்சுவதையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

சமுதாய, பொருளாதார, சமய மதிப்பு அடிப்படையில் காணப்படும் சமுதாய அவலங்களைச் சுட்டிக் காட்டுவதுடன், மூடநம்பிக்கையின் துணைகொண்டு மக்களை ஏமாற்றும் அவலநிலையையும், சமயநம்பிக்கையின் காரணமாக மக்களிடையே பகுத்தறிவுக்கொவ்வாத மூடநம்பிக்கைகள் நிலவுவதையும், பொருளாதார மேம்பாடுமிக்க மேட்டுக்குடியினர் சிலர் தீயசெயல்களில் ஈடுபடுவதையும் சுட்டிக்காட்டி கலைஞர் முரசொலியில் எழுதிய 1. புகழேந்தி 2. நளாயினி 3.சபலம் 4. ஆட்டக்காவடி 5.குப்பைத்தொட்டி 6.சந்தனக்கிண்ணம் 7.சங்கிலிச்சாமி 8. கங்கையின்காதலி 9.தாய்மை 10. தப்பிவிட்டார்கள் 11. தப்பவில்லை 12. ஆதரிக்கிறார் 13. இரகசியம் 14.முந்நூறு ரூபாய் 15. ஏழை 16. ஒரிஜினலில் உள்ளபடி 17. பனங்குலை 18. செத்தவன் கதை 19. பிரேத விசாரணை 20. கண்டதும் காதல் ஒழிக 21. ஆலமரத்துப் புறாக்கள் 22. தொத்துக்கிளி 23.காதல் கடிதம் 24. கண்ணடக்கம் 25. வாழமுடியாதவர்கள் 26. அபாக்கிய சிந்தாமணி 27. பாலைவனரோஜா 28. புரட்சிப்படம் 29. திடுக்கிடும்கதை 30. கடைசிக்கட்டம் 31. ஐயோ ராஜா 32. விஷம் இனிது 33. வேணியின் காதலன் 34. அமிர்தமதி 35. சுமந்தவள் 36. சித்தார்த்தன் 37. நுனிக்கரும்பு ஆகிய 37 சிறுகதைகளின் தொகுப்பு கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள் என்னும் நூலாகும்.

**சபலம்**

ஆதிக்க இனத்திற்கே உரிய சந்தேகத்தாலும், சபலத்தாலும் செம்மாந்திருந்த ஒரு குடும்பம் சீரழிந்த கதை. மனைவியின் மீது சந்தேகப்பட்டுக் குழந்தையைக் கொன்ற கணவனின் அற்பப் புத்தியைப் படம்பிடித்துக் காட்டும் சிறுகதை. மனம் ஒத்த தம்பதிகளாக வாழ்ந்தாலும் சந்தேகப் பேய் வந்தது குணவாளன் கூட முட்டாளாகக்கூடும் என்பதை குமரேசன் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். சந்திரா மட்டும் அல்ல எந்த பெண்ணின் பார்வையின் அர்த்தத்தையும் உணர்ந்து கொள்ளாத ஆண்வர்க்கத்தின் அடாவடித்தனம் கொடூரமாக மாறிக் குழந்தையின் உயிரைப் பறிக்கும் நிலைக்கு ஆளாவதை வெளிப்படுத்துகிறது.

**பனங்குலை**

இளம்பெண் கமலத்தை அடைய வேண் டும் என்ற ஆவலில் அண்ணன் தங்கை என்று அபாண்டம் சுமத்தி உண்மையான காதலர்களைப் பிரித்திட்ட மோதகவிநாயகம் பிள்ளையின் வேடத்தைக் காட்டும் சிறுகதை, இப்படியும் சில பிறவிகள் உலகத்திலே உண்டு என்பதைச் சொல்கிறது.

**தாய்மை**

தாய்மைப் பேற்றின் உயர்வைக் காட்டும் வகையில் எழுதப் பெற்ற இச்சிறுகதை, தான்பெற்ற மகளுக்குப் பால் கொடுத்தால் அழகும் இளைமையும் போய்விடும் என்று எண்ணும் சௌந்திரியைக் காட்டுகிறது. கருவைச் சுமந்தவள் தாயாக மாட்டாள்; அதைப் பேணி வளர்ப்பவளே தாயாவாள் என்பதை இக்கதை உணர்த்துகிறது.

**குப்பைத் தொட்டி**

கலைஞரின் சிறுகதைகளில் தனித்துவமானதாக அவரது வாசகர்களால் என்று நினைவுகூறப்படுவது 'குப்பைத்தொட்டி' என்கிற அவரது சிறுகதை. சர்ரியலிஸம், இருத்தலியல்வாதம், அமைப்பியல்வாதம், பின்நவீனத்துவம், மாந்திரீகயதார்த்தவாதம் போன்ற மேற்கத்திய கோட்பாட்டு முறைகள் தமிழ் நிலத்தில் பேசப்படுவதற்கு வெகுகாலம் முன்பே, ஒரு குப்பைத்தொட்டி மூலமாக சமகால சமூகத்தை பிரதிபலிக்கும் சிறப்பான வடிவ உத்தியை அச்சிறுகதையில் கலைஞர் பயன்படுத்தி இருக்கிறார்.

நாட்டில், சமுதாயத்தில் நடக்கும் அவலங்கள் அனைத்தும் யாருக்கும் தெரியாமல் குப்பைத் தொட்டியில் சேர்த்தால், குப்பைத் தொட்டி (எழுந்து) உயிர்பெற்று சாட்சி சொல்லும்



பன்முக நோக்கில் முத்தமிழறிஞர் கலைஞரின் படைப்புகள்

வகையில் அமைத்து எழுதியுள்ளார். குப்பையைக் கிளறினால் பல உண்மைகள் வெளிவரும் என்பதை நடைமுறை வாழ்வியலில் யதார்த்தமாக எடுத்துரைக்கும் கலைஞரின் மாண்பு வியக்கத் தக்க வகையில் உள்ளது, அரசு கூட குப்பைத் தொட்டிக்குப் பின் ஒளிந்து கொள்ளும் அவலம் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்துமத வெறியர்கள் இக்கதையை எதிர்த்து முற்றுகையிட்டு பிரச்சினை செய்தார்கள். அப்போது, அக்கதையைப் பாராட்டி மூட்டை மூட்டையாக வந்திருந்த கடிதங்களை அவர்களுக்கு முன்பாகக் கொட்டி, "இக்கதையை ஏற்றுக் கொண்டவர்களும் இந்துக்கள்தான்" என்று மூக்குடைத்தார் குஷ்வந்த்சிங். பின்னர் 'குப்பைத்தொட்டி', ஐரோப்பிய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. "குப்பைத்தொட்டி இங்கே குப்பையாக ஒதுக்கப்பட்டாலும் பிற மொழிகளில் கொண்டாடப்படுகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார் கலைஞர்.

**விஷம் இனிது**

"இராமர் என்ன என்ஜினியரா?" என்று ராமர் பாலம் விவகாரத்தில் கலைஞர் செய்த கேலி, நாடு முழுக்கவே கடுமையான அதிர்வலைகளை எழுப்பியது. எழுபது ஆண்டுகளுக்கு முன்பு அவர் எழுதிய 'விஷம் இனிது' கதையிலேயேகூட இராமர் எதிர்ப்பை வலுவாக வெளிப்படுத்தி இருக்கிறார். "இராம பிரானை விட இந்த விஷம் இனிது" என்கிற கூரிய விமர்சனத்தோடு கூடிய வசனம் அந்த சிறுகதையில் வெளிப்படுகிறது. கடவுள் மறுப்பு என்கிற கலைஞரின் பண்பு, அவரது சிறுகதைகள் பலவற்றிலும் சம்பவங்களின் ஊடாகவும், வசனங்களின் வெளிப்பாடாகவும் பளிச்சென்றே அமைந்திருக்கிறது.

**கண்ணடக்கம்**

'கண்ணடக்கம்' என்கிற கதையில் பிளேக் நோய் பரவி, ஊரெல்லாம் பிணம். காளிபக்தன் மனசுடைந்துப் போய் காளிதேவியிடம் நியாயம் கேட்பான். "கருணைக்கடலா நீ? பேய்க்கும் உனக்கும் என்ன வேறுபாடு?" இதை வாசிக்கும்போதே உணர்ந்திருப்பீர்கள். கலைஞரின் பெரும்பாலான கதைகளின் நாயகர்கள் 'பராசக்தி' குணசேகரன்களேதான். 'நடுத்தெரு நாராயணி' என்கிற சிறுகதையில் 'பராசக்தி' கல்யாணியைகூட நீங்கள் கண்டுக்கொள்ளலாம்.

**நரியூர் நந்தியப்பன்**

சிறுகதையின் வடிவங்களில் பரிசோதனை செய்துப் பார்ப்பது கலைஞருக்கு மிகவும் பிடித்தமானது. 'நரியூர் நந்தியப்பன்'

என்கிற சிறுகதையை கடிதவடிவில் எழுதியிருப்பார். அவருடைய சிறுகதைகளில் சாமியார்களை தோலுரிக்கும் சம்பவங்கள் ஏகத்துக்கும் அமைந்திருக்கும். 'நளாயினி', புராண எதிர்ப்பு பேசும். 'சந்தனக் கிண்ணம்', இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரின் நியாயத்தை எடுத்துச் சொல்லும்.

## நளாயினி

கலைஞரின் பழக்கூடை என்னும் சிறுகதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு.புராண இதிகாச எதிர்ப்புணர்வை மையமாகக் கொண் டமைந்த நளாயினி' உள்ளிட்ட காதல் கடிதம், புரட்சிப்பாடம், நளாயினி, நாட்டிய கலாராணி, விஷம் இனிது, பாலைவனரோஜா, அய்யோ ராஜா, மானம் ஆகிய எட்டுச் சிறுகதைகளின் தொகுப்பு நூல். நளாயினி புராணக் கதையிலிருந்து நளாயினி என்னும் பருவ மங்கையின் மணமாக மாறி உள்ளக் கருத்தை வெளிப்படுத்தும். தன்மை யதார்த்தமானது. புகழ் என்னும் சொல் எப்போதும் மக்களை இயல்பாக வாழ விடாது என்பதற்கு இலக்கணம் தருவது தான், புகழேந்தி, மற்றும் நளாயினி சிறுகதைகள். புகழ் பெருமை ஒரு மனிதனை இயல்பாக யதார்த்தமாக வாழவிடாது என்பதை தன்கதையியில் வழி வெளிப்படுத்துகிறார் கலைஞர் கருணாநிதி.

## ஆட்டக்காவடி

ஆட்டக்காவடி கதை மூலம் மூடநம்பிக்கைகளில் கலைகள் நசுக்கப்படுவதையும் பகுத்தறிவு பாதையில் வரும் இடர்களைக் கண்டு துவளாமல் துணிந்து செயல்படும் பகுத்தறிவின் திறனை கனிமொழியின் பாத்திரம் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார்.

## முடிவுரை

புதினம், சிறுகதை, கவிதை, கடிதம், கட்டுரை என கலைஞரின் எல்லா எழுத்துக்களிலும் மனிதநேயம் நிறைந்து நிற்கிறது. கலைஞர் படைப்புகளில் வெளிப்பட்டு நிற்கும் கருத்துக்களும் அவர்தம் நெஞ்சார்ந்த விழைவுகளும் அவருடைய சமுதாய நோக்கிற்குச் சான்றாகத் திகழ்கின்றன. சமுதாயக் கொடுமைகளை மிகச் சரியாகக் கண்டறிந்து அவற்றுக்கான மிகச் சரியான தீர்வுகளைக் கண்டறிந்தவர்.தேவையான இடங்களில் இயல்பான வேகம்; மிகத் தேவையான இடங்களில் எரிமலையாய்ப் பொங்கும் சீற்றம், கலைஞரின் ஆளுமை ஆகும். மனிதனின் அறிவு அழிப்பு நோய்களுக்கெல்லாம் பகுத்தறிவு மருந்து தந்து குணப்படுத்தி விடுகிறது. சமூக நெருடல்களுக்கு மிகக்கூர்மையான உள்ளடக்கங் களால் உருவான படைப்புகள் தந்து தீர்வுகண்டவர். அழகுத்



கலைஞரின் ஆழ்ந்த சிந்தனைகள் தமிழ்நடையில் அமைந்த கலைஞரின் ஆழ்ந்த சிந்தனைகள் தமிழரின் மேன்மைக்குச் சான்றாகும்.

வாழும் காலத்தின் மாற்றங்களையும் ஏற்றங்களையும் மிக நுட்பமாக நுணுகிப்பார்த்து தம் படைப்புகளில் பதிவு செய்தவர் கலைஞர். தமிழ் நாட்டுணர்வையும் தமிழ் மொழியுணர்வையும் சிதையாமல் காக்க எழுந்தவையே கலைஞர் படைப்புகள்! தாய்த்தமிழுக்கு இன்னல் நேருமெனில் கலைஞரின் எழுத்துக்கள் வேல்களாகவும் வாள்களாகவும் மாறிப் போரிடத் தொடங்கிவிடுகின்றன.

எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக இடைவிடா தமிழ்ப்பணி புரிந்த கலைஞர் அவர்கள், காலமாகி இருக்கும் இச்சூழலிலாவது அவரது எழுத்துகள் மீள்வாசிப்பு செய்யப்படுவதும், அவை குறித்த துல்லியமான ஆய்வுகள் நடத்தப்படுவதுமே நேர்மையான செயல்பாடாக இருக்க முடியும். காலம் கடந்தாவது இந்தச் செயலை நவீன இலக்கியவாதிகள் செய்வார்கள் என்று நம்புவோம்.

★★★

### துணை நின்ற நூல்கள்

1. கலைஞர் கருணாநிதியின் சிறுகதைகள், பாரதி நிலையம், சென்னை, முதற்பதிப்பு,1971; இரண்டாம் பதிப்பு, மே 1982, மூன்றாம் பதிப்பு, டிசம்பர் 1986.
2. கலைஞர் படைப்புகள் நூலடைவு, முனைவர் பெ. கோவிந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண். 377.